பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 5உ (21—7—67) வெள்ளி ★ வெளியூர்: ஆடி 6உ (22—7—67) சனி [இதழ்: 32

வேலை நிறுத்தம்

போபால், ஜூலை 20—

ஒரு காங்கிரசல்லாத அமைச்சரவை அமைவதைத் தடுத்து நிறுத்தும் வகையில், அரசியல் சட்டத்துக்கும், சனநாயகத்துக்கும் விரோதமான முறையில் மத்தியப் பிரதேசச் சட்டமன்றக் கூட்டத் தொடரை முடிவுக்குக் கொண்டுவந்திருப்பதைக் கண்டிக்கும் வகையில் மாநிலம் முழுவதிலும் 22—7—67 அன்று கடையடைப்பு — வேலைநிறுத்தம் மேற்கொள்ள எதிர்க் கட்சியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

★ புதிய அச்சத்தையும் ஆத்திரத்தையும் தூண்டும் டில்லி அமைச்சரின் அறிவிப்பு ★ 5 கோடிக்குப் பதில் 1 கோடி ஒதுக்குவதா?
★ திட்டக் குழுவும் நேருவும் ஏற்றுக்கொண்ட திட்டத்தை மறு ஆய்வு செய்வதா? ★ மத்திய அமைச்சரின் விசித்திரப் போக்கு!

எழுச்சி நாள் -- கைவிடுவதற்கில்லை!

அறிஞர் அண்ணா திட்டவட்ட அறிவிப்பு

சென்னை, ஜூலை 20—

"சேலம்—தூத்துக்குடித் திட்டங்களை வற்புறுத்தும் நோக்குடன் மேற்கொள்ள இருக்கும் எழுச்சி நாள் ஏற்பாட்டைக் கைவிடுவதற்கில்லை"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், இன்று திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

செய்தியாளர்களின் கேள்விகட்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளிக்கையில், 'எழுச்சி நாள்' என்பது ஒரு போராட்டம் அல்ல என்றும், 'மாநிலம் முழுவதிலும் பொதுக்கூட்டங்கள் நடத்திக் கோரிக்கையை வலியுறுத்தும் ஏற்பாடேயாகும்' என்பதையும் விளக்கினார்கள்.

"கடையடைப்போ, வேலை நிறுத்தமோ வேறு எவ்வகை ஆர்ப்பாட்டங்களோ இருக்காது" என்றும் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

அண்ணா அவர்கள் மேலும் உரைத்ததாவது:—

"எழுச்சி நாளன்று நாடெங்கிலும் பொதுக்கூட்டம் மட்டுமே நடைபெறும். சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றியும் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தைப் பற்றியும் மக்களுக்கு விளக்கி, அவற்றை, நிறைவேற்றுமாறு மத்திய அரசினரைக் கேட்டுக்கொள்ளுவதற்காகவே இப்பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சம் நீங்கிவிடுமா?

தூத்துக்குடித் திட்டம் தொடர்பாக புதிதாக ஆய்வு நடத்த முனைவது, மக்களிடையே நியாயமான ஓர் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நடப்பு ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ரூ. 50 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தி விடுவதால் மட்டும் இந்த அச்சம் நீங்கிவிடாது.

உணர்வுக்கு இடமுண்டா?

மக்களவையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் வெளியிட்ட அறிக்கை எனக்கு எந்த உணர்வையும் அளிக்கவில்லை. அது குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை.

ஆத்திரம் மூளாதா?

இந்த ஆண்டுக்குக் குறைந்த அளவு ரூ. 3 கோடியாவது ஒதுக்கியிருக்கவேண்டும். இந்த அளவுக்குக் குறைந்த தொகையை ஒதுக்குவதே மேலும் ஆத்திரமூட்டச் செய்கிறது.

இத்திட்டம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி நிறைவேறவேண்டுமானால், இவ்வாண்டுக்கு ரூ. 5 கோடி ஒதுக்கியிருக்கவேண்டும். 'திட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை' என்று கூறும் அதே அமைச்சர், 'இன்னும் பொருளாதார வாய்ப்புக்களைஉறுதிப்படுத்தப் புதிய ஆய்வு நடத்த வேண்டும்' என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்.

தூத்துக்குடித் திட்டம் பொருளாதார முறையில் பயனுள்ள திட்டம் என்பதிலே எனக்கு மனப்பூர்வமான உடன்பாடு உண்டு.

திட்டக் குழுவும், மத்திய அரசும் காலஞ்சென்ற தலைமையமைச்சர் நேருவும், இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளனர்."

ம. பி. மாநிலத்தில் மக்களாட்சி கொலை

ஜெய்ப்பூர், ஜூலை 20—

மத்தியப் பிரதேச சட்டமன்றக் கூட்டத்தை முடித்து வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதைப் பற்றி விவாதிப்பதற்காக இன்று இராஜஸ்தான் சட்டமன்றத்தில் ஜனசங்க உறுப்பினர் சதீஷ் சந்திர அவர்வால் என்பவர் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

அதைப் படிக்கும்போது மன்றத்தில் கொந்தளிப்பும் குழப்பமும் ஏற்பட்டன. இந்த நிலைமை அரை மணி நேரம் நீடித்தது.

சிறிது நேரம் எதிர்க் கட்சியினர் கூக்குரல் எழுப்பிக்கொண்டிருந்தனர்; ஒன்றும் காதில் விழவில்லை. அமைதியை நிலைநாட்டுவதற்காகத் துணை அவைத் தலைவர் முயற்சி எடுத்துக்கொண்டார்; ஆனால், அவரது முயற்சி தோல்வியடைந்தது.

"மற்றொரு மாநிலத்தில் சனநாயகக் கொலை செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டு மறுநாள்வரை காத்துக்கொண்டிருக்க முடியாது" என்று எதிர்க் கட்சியினர் கூறினர்.

'எழுச்சி நாள்' தீர்மானம்

ஜூலை 23—'எழுச்சி நாள்' அன்று நடைபெறும் பொதுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம்:—

"சர்வதேச அரங்கில் நாட்டின் தன்மதிப்பு உயரவும், நாட்டின் இயற்கைச் செல்வங்களை வகைப்படுத்தி -- முறைப்படுத்தி வளமை காணவும், திட்டங்களின் அடிப்படையில் நாட்டைச் செழுமையுள்ளதாக்கவும் படிப்படியான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது இன்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப, மத்திய அரசு திட்டமிட்டு நிறைவேற்றியுள்ளதாகச் சொல்லப்படும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தமிழ்நாட்டு மக்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் உறுதுணையும் மத்திய அரசுக்கு அளித்து, நாட்டின் பொதுப்படையான வளர்ச்சிக்காகப் பலவித தியாகங்களும் செய்துவருகின்றனர்.

"இப்படிச் செய்துவரும் தியாகங்களுக்கும், திட்ட முதலீடுகளின் வகைக்குச் சேர்த்துக் கொடுக்கும் செல்வங்களுக்கும் உரிய பங்கு — மரியாதை, மத்திய அரசிடமிருந்து கிடைக்கின்றனவா என்பதைத் தமிழக மக்கள் நினைத்துப் பார்க்குந்தோறும், வேதனையடையும் வகையிலேயே மத்திய அரசின் அலட்சியப் போக்கு இருந்துவருவதைத் தமிழகத்தின் சர்வ கட்சியினரும் அடங்கிய இந்தக் கூட்டம் வருத்தத்துடன் மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

"பொதுவாக மத்திய அரசிடமிருந்தும், குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நியாயமான பங்கீடும், உரிய திடடங்களும் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு தமிழக மக்கள் அனைவர் உள்ளங்களிலும் நிலவி வருவதைப் பெருமளவு வெடித்துக் கிளம்பும் கிளர்ச்சியாக உருவெடுக்கவொட்டாமல், தமிழகத்திற்கே உரிய அமைதியான பண்புகளும் அரசியல் நாகரிகமும் சனநாயகத்தின் முழுப் பொருளை உணர்ந்த மக்கள் தலைவர்களின் செல்வாக்கும் இங்கு தடுத்து நிறுத்தி வருகின்றன.

"இயற்கையாகவே செழிப்பும் வளமையும், உழைப்பாற்றலும், தன்மதிப்பு உணர்வும் மிக்க தமிழ்நாடு, இதுவரை வெறும் பேராசை காரணமாகவே ஆடம்பரமான திட்டங்கள் எவற்றிற்கும் மத்திய அரசிடம் கெடுபிடி செய்தோ, கிளர்ச்சியில் ஈடுபட்டோ நடந்து கொண்டதில்லை. மேலும், 'பெருமளவு முதலீடுகளை முழு வேகத்தில் செலவிட்ட பிறகே இங்கு வளமை உண்டாக்க முடியும்' என்கிற அளவுக்குத் தமிழகம் காடோ கரம்போ, பாலையோ சதுப்போ அல்ல! ஓடித் தேடி ஊரூராய் பார்த்து, 'திட்டங்களுக்காகவே திட்டங்களை இங்கு நிறைவேற்ற வேண்டும்' என்று என்றைக்கும் தமிழ்நாடு வாதாடியதில்லை! 'இயற்கைச் செல்வமும் இயல்பான வசதிகளும் திட்டங்களில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்' என்று ஆகும்போது, இதுவரை அந்தப்படியாகத் தமிழ்நாடு மத்திய அரசால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைப் பலமுறை-வேதனையோடு தமிழகத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"மூன்று ஐந்தாண்டுகளுக்காக மத்திய அரசு வாங்கிய வெளிக் கடன்களுக்காகவும், செலவிட்ட பொருளை ஈடு செய்வதற்காகவும், நாட்டின் மற்ற பகுதிகளைப்போலவே தமிழ்நாடும் பிணைப்புற்றிருக்கிறது; ஆனால், தமிழர்களின் நெடுநாள் ஆவலும் கோரிக்கையுமான சேலம் உருக்காலை, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் ஆகிய இரு திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமெனத் தமிழக மக்களும், அவர்கள் தலைவர்களும் தொடர்ந்து வற்புறுத்திக் கேட்டு வந்தும் மத்திய அரசு அலட்சியப் போக்கிலும், பொறுப்பற்ற முறையிலும் நடந்து வருவதை சர்வ கட்சியினரும் அடங்கியஇந்த எழுச்சி நாள் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

"சேலம் இரும்புக் கனிகளைப் பயன்படுத்தும் முயற்சி ஏறக்குறைய 150 ஆண்டுகளாக இங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல், தூத்துக்குடித் துறைமுகத் திட்ட முயற்சியும் ஏறக்குறைய கடந்த நூறுண்டுக் காலமாகப் பல்வேறு வகையில்—பல்வேறு துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் நினைவிலும் முயற்சியிலும் நீங்காத இடம் பெற்றுத் திகழும் இந்தத் திட்டங்களை, நியாயமாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முழுமையாக உள்ளடக்கி மத்திய அரசு நிறைவேற்றியிருக்க வேண்டும்; மாருக, வேளைக்கொரு சமாதானமும் ஆளுக்கொரு காரணமுமாகச் சொல்லி, இத்தனை நாளும் இந்தத் திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்ற மனமில்லாதிருப்பதை உணர்ந்து இந்தக் கூட்டம் பெரிதும் வருந்துகிறது.

"எல்லையில் நிலவும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பையும், பகுதிக்குப் பகுதி உள்நாட்டில் நிலவும் ஏற்றத்தாழ்வையும், தர்க்க அறிவாலோ, புத்தகப் புள்ளிவிவரங்களாலோ போக்கிவிட முடியாது என்பதை மத்திய அரசு உணரவேண்டும். நாட்டின் ஒட்டு மொத்தமான வளர்ச்சிக்கேற்பவும், நாட்டின் ஒருமைக்கு வலிவு சேர்க்கும் வகையிலும் அந்தந்தப் பகுதி மக்களின் உள்ளத்தில் நிறைவு கூட்ட வேண்டியது மத்திய அரசின் கட்டாயக் கடமையாகும்.

"தூத்துக்குடி, சேலம் திட்டங்கள் ஏன் தேவை—எதற்குத் தேவை என்பனவெல்லாம் ஆண்டுக்கணக்காகத் தமிழ்நாட்டுத் தலைவர்களால் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்தக் கூட்டம் மீண்டும் நினைவூட்டுகிறது.

"சேலம் இரும்புருக்காலையும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகமும் தமிழர்களின் இன்றியமையாத் தேவை என்பதை, சர்வ கட்சியினரும் அடங்கிய இந்தக் கூட்டம் மத்திய அரசுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தெரிவிப்பதுடன், இந்தத் திட்டங்களை எத்தகைய சாக்குப்போக்கும் சொல்லாமல் ஏற்றுக்கொண்டு, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றுவதற்கு உடனடிச் செயல்களில் முனைந்து ஈடுபட வேண்டுமென்று இந்தக் கூட்டம் மத்திய அரசை மிக அழுத்தமாக வற்புறுத்துகிறது."

—தி. மு. க.

மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் அமளி

வாய்ச் சண்டை முற்றி கைகலப்பு

கல்கத்தா, ஜூலை 20—

மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர்களுக்கும்—ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கும் வாய்ச் சண்டை முற்றி, பலமான கைகலப்பு ஏற்பட்டது. ஒருவரையொருவர் பலமாகத் தாக்கிக்கொண்டனர்.

வங்காளப் போட்டிக் காங்கிரசு உறுப்பினர் ஒருவரைக் காங்கிரசார் கடத்தியதாகக் கூறப்பட்டதையடுத்து இத்தகராறு ஏற்பட்டது.

காங்கிரசு மேலவை உறுப்பினர் அஷ்டோஷ் கோஷ் என்பவர் வீட்டிலிருந்து போட்டிக் காங்கிரசு உறுப்பினர் அன்ஸ்டா, காவல் துறையினரால் மீட்கப்பட்டார்.

குழப்பத்துக்கிடையே அவை நடவடிக்கையை அரை மணி நேரத்திற்கு அவைத் தலைவர் விஜய்குமார் பானர்ஜி தள்ளிவைத்தார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. சிறப்பு

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 5 (21—7—67) வெள்ளி

எழுச்சி நாள்--

இந்திய அரசின் கடமை என்ன?

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தல்—சேலத்தில் உருக்காலை நிர்மாணித்தல்—இரண்டும் தமிழகத்தின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றம் தரக்கூடியது.

இவ்விரண்டுத் திட்டங்களையும், 'தமிழகத்திலிருக்கக்கூடிய ஒரு அரசியல் கட்சி கோருகிறது—மற்ற அரசியல் கட்சிகள் எதிர்க்கின்றன' என்ற நிலை இல்லை.

இவ்விரண்டுத் திட்டங்களையும், அரசியல் கட்சிகள் அனைத்தும் தொடர்ந்து கோரி வருகின்றன. இவ்விரண்டுத் திட்டங்களில் சேலம் உருக்காலைத் திட்டத்திற்கான துவக்கப்பணி அனைத்தையும், ஆட்சியில் இருந்துவந்த காலத்திலேயே காங்கிரசுக் கட்சி நிறைவேற்றிவிட்டிருக்கிறது.

சேலம் உருக்காலைத் திட்டத்தை, சொந்தப் பொறுப்பில் ஏற்று நடத்த வேண்டும் என இந்திய அரசாங்கத்தை, ஏற்கனவே இருந்த அரசாங்கம்—துவக்கம் முதல் வற்புறுத்திவந்திருக்கிறது.

சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக, முன்னாள் காங்கிரசு ஆட்சி எடுத்திருப்பது மலையளவு முயற்சியாகும். இது மறைக்கக் கூடியதல்ல—இதை மறைக்கத் தேவையுமில்லை.

'சேலம் உருக்காலை உறுதியாகத் துவக்கப்படும்' என்ற நம்பிக்கையை, காலஞ்சென்ற நேரு முதற்கொண்டு இன்றுள்ள தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள்வரை தமிழ் மக்களுக்கு அடுத்தடுத்து ஊட்டிவந்திருக்கின்றனர். இதன் விளைவாக, சேலம் உருக்காலை பற்றிய ஆசை, தமிழ் மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிரம்பி வழிந்துகொண்டிருக்கிறது.

இந்திய அரசின் சார்பில் துவங்கப்படக்கூடிய சேலம் உருக்காலை, மூன்றுவது திட்டத்திலேயே இடம் பெற்றுவிடும் என்று, முன்னைய காங்கிரசு ஆட்சியினரும் எதிர்பார்த்தனர்; கழகம் உட்பட மற்ற அரசியல் கட்சியினரும் எதிர்பார்த்தனர்.

மூன்றுவது திட்டத்தில் மேற்படி உருக்காலை இடம் பெருததைக் கண்ட தமிழ் மக்கள் ஏமாற்றம் பெற்றனர்; என்றாலும், தமிழகக் காங்கிரசு ஆட்சியினர் கூறிவந்திருக்கின்ற உறுதிமொழிகளில் நம்பிக்கை வைத்திருந்த தமிழ் மக்கள், 'நான்காவது திட்டத்திலாவது உருக்காலைத் திட்டம் இடம் பெற்றுவிடக்கூடும்' என்பதில் நம்பிக்கை இழக்காமல் இருந்தனர்.

பொதுத் தேர்தலுக்கு ஒரு திங்கள் இருக்கின்றபொழுதுகூட, அன்றைய காங்கிரசு ஆட்சியினர், 'சேலம் உருக்காலை ஏற்பாடு நான்காவது திட்டக் காலத்தில் துவங்கப்படுவது உறுதியிலும் உறுதி' என முழங்கியதுடன், 'தனது சொந்தப் பொறுப்பில் உருக்காலையைத் துவங்க இந்திய அரசு முன்வரவில்லையானாலும், தனது சொந்தப் பொறுப்பில் துவங்கும் முயற்சியை மேற்கொள்ளும்' என்ற கருத்தையும் அறிவித்துவந்தது.

தான் அறிவித்தவண்ணம், உருக்காலையைத் துவக்குவதற்குரிய அனுமதியைப் பெற—அதற்குரிய கட்டணத் தொகையையும் இந்திய அரசிடம் செலுத்தி—அனுமதி தருமாறு விண்ணப்பித்துக் கொண்டது.

ஆனால், முன்னைய காங்கிரசு ஆட்சி தொடர்ந்து எடுத்துவந்த இத்துணை முயற்சிகளும், விழலுக்கிறைத்த நீராயிற்று! உருக்காலைக்காக அன்றையத் தமிழக அரசாங்கம் எடுத்துக்கூறிய நியாயங்களும், நேர்மையான வாதங்களும், செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று!

அன்றைய காங்கிரசு ஆட்சி அகற்றப்பட்டு, அப்பொறுப்பினை, தமிழ் மக்கள், நமது கழகத்திடம் ஒப்படைத்திருக்கின்றனர். இதன் விளைவாகவும், குறிப்பாக அரசியல் எதிர்க் கட்சி என்ற நிலையில் நின்று முழுமூச்சாக வற்புறுத்திவந்திருப்பதன் விளைவாகவும், காங்கிரசு விட்டுச்சென்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கழக ஆட்சி, சேலம் உருக்காலைத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இது, கழக ஆட்சியின் கடமையாகும்.

சேலம் உருக்காலையின் இன்றியமையாமையை மெய்ப்பிக்க உள்ள நியாயங்களையும் வாதங்களையும், ஏற்கனவே பலமுறை காங்கிரசு ஆட்சி, இந்திய அரசுக்கு எடுத்துக் கூறியாகிவிட்டது.

அன்றைய காங்கிரசு ஆட்சி கூறிய நியாயங்களையும் வாதங்களையும், 'தவருனது—உண்மைக்கு மாருனது' என, இந்திய அரசின் சார்பில் கூறினவர் எவருமிலர்!

எனவே, சேலம் உருக்காலை நிர்மாணிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்திய அரசுக்கு உணர்த்த இனி, இன்றைய கழக அரசாங்கம் காட்டக்கூடிய புதிய நியாயங்கள் எதுவுமில்லை. காங்கிரசு அரசாங்கம் திரும்பத் திரும்பப் பலமுறை கூறிவந்திருக்கின்ற அதே நியாயங்களைத்தான், இன்றைய ஆட்சியும் கூறியாக வேண்டும்.

சேலம் உருக்காலை தேவை பற்றிய தெளிவினை இந்திய அரசு பெருமலிருந்தாலாவது, அத்தெளிவினை ஏற்படுத்த இன்றைய கழக ஆட்சி முயற்சிக்கத்தான் வேண்டும்; ஆனல் இந்திய அரசுக்கோ, திட்டம் பற்றிய தெளிவு நிரம்ப இருக்கிறது.

எனவே, சேலம் உருக்காலை பற்றி இனி இந்திய அரசிடம் வாதிடுவதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இத்திட்டத்தைப் பெறுவதில் தமிழக மக்களுக்கு எத்தகைய ஆர்வமும் விருப்பமும் இருக்கிறது என்பதைத் திரட்டிக் காட்டவேண்டும் என்ற சனநாயக முடிவினை, கழகத்தின் ஆட்சிப் பிரிவும், கட்சிப் பிரிவும், தோழமைக் கட்சிகளைக் கலந்துகொண்டு மேற்கொண்டிருக்கின்றன.

'சேலம் உருக்காலை வேண்டும்' என்ற எழுச்சியின் அளவு எத்தகையது என்பதை, ஜூலை 23-ம் நாள் இந்திய அரசு உணரத்தான் போகிறது. இந்த எழுச்சி நாள், தமிழக மக்களின் உள்ளத்தின் உணர்வைப் பிரதிபலிப்பதே அல்லாது, வேறு ஒன்றுமில்லை. இது, சனநாயக முறையால் 'நியாயமானது' என ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற ஒன்றேயாகும்.

இந்த எழுச்சி நாளிலிருந்து கிடைக்கின்ற பாடத்தை, இந்திய அரசு காணட்டும்—பின்னர் அமைதியாக ஆராய்ந்து பார்க்கட்டும்!

இதுவரை துவக்கப்பட்டிருக்கின்ற நான்கு உருக்காலைகளையும் துவக்கப்பட்டிருப்பதுபோல், சேலம் உருக்காலையையும் சொந்தப் பொறுப்பில் துவங்க இந்திய அரசு முன்வரட்டும்!

எழுச்சி நாளில் வெளிப்படக்கூடிய தமிழ் மக்களின் எழுச்சி தரும் பாடத்தைத் தெரிந்து தெளிந்ததற்குப் பின்னர், ஏற்கனவே விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்ற அனுமதியைக் கொடுத்து, சொந்தப் பொறுப்பில் சேலம் உருக்காலையைத் துவங்குவதற்குரிய உரிமையையாவது தமிழக அரசாங்கத்துக்கு வழங்க, இந்திய அரசாங்கம் முன்வரட்டும்!

சேலம் உருக்காலையை இந்திய அரசாங்கம், தனது சொந்தப் பொறுப்பில் உடனடியாக நிறைவேற்றி வைப்பதுதான், முழு அளவு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்திடக்கூடியதாகும்.

திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பைத் தமிழக அரசிடம் ஒப்படைப்பது என்பது, இரண்டாம்பட்சமாக இருப்பதேயாகும்.

—கா. க.

தமிழக அரசின் சிக்கன நடவடிக்கை

காவல் துறையில் 210 பதவிகள் நீக்கம்

சென்னை, ஜூலை 19—

"அரசின் சிக்கன நடவடிக்கையின் காரணமாக காவல்துறையில் 210 பதவிகள் எடுக்கப்பட்டன"

என்று முதலமைச்சர் அண்ணு, மேலவையில் கேள்வி நேரத்தின் போது கூறினர்.

"பொதுவாக ஓய்வுபெற்றவர்களின் பதவி நீடிக்கப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காகத் தேவைப்படும்போது சில இனங்களில் மட்டுமே பதவிக்காலம் நீடிக்கப்படுகிறது"

என்று வேருெரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

இரும்புக்கு விலை நிர்ணயம்---உழு கருவிகளுக்கு முதலிடம்

மக்களவையில் செ. கந்தப்பன் கேள்விகள்

புதுடில்லி, ஜூலை 17—

நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் கேட்ட கேள்விகளும், தொடர்புடைய அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

செ. கந்தப்பன்:—"சிமெண்டுக்கு நிர்ணயித்திருப்பது போல், அடிப்படைப் பண்டமாக இருக்கின்ற இரும்பிற்கும், இந்தியா முழுவதும் ஒரே விலை நிர்ணயம் செய்ய வேண்டுவதன் அவசியத்தை அரசு உணருகிறதா என்றறிய விரும்புகிறேன். ஏனெனில், இரும்பு உற்பத்தி செய்யப்படுகிற இடத்தில் மலிவாகவும், தொலைதூரத்தில் உள்ளோர் வாங்கும்போது அதன் விலை உயர்ந்தும் காணப்படுகின்றது."

டாக்டர் சென்ன ரெட்டி:—"விலையில் மாறுபாடு இருப்பது உண்மையே; விலைகளை ஒருமுகப்படுத்துவது பற்றி அரசு தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டு இருக்கின்றது."

உழு கருவிகள்

செ. கந்தப்பன்:—"பல்வேறு மாநிலங்களின் வேறுபட்ட தேவைகளை முழுவதுமாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு போதுமான டிராக்டர்கள், விசைக் கலப்பைகள், கருவிகள் முதலியன உற்பத்தி செய்வதற்கு அரசு அந்நியச் செலாவணி ஒதுக்கீட்டில் முதலிடம் தருமா என்றறிய விரும்புகின்றேன்."

திரு. எப். ஏ. அகமது:—"இவை எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளோம். முன்பு இதற்கு முதலிடமில்லை என்பது கனம் உறுப்பினருக்கே தெரியும்; ஆனல் தற்போது அந்நியச் செலாவணி ஒதுக்கீட்டில் இதற்கு முதலிடம் தரப்பட்டு, எல்லா வகையான கருவிகளும் தொழிற்சாலைக்குத் தேவையான பிறவும் தருவிக்கப்படுகின்றன."

முன்னாள் அமைச்சர் ஆர். வெங்கட்ராமனின் நற்பணிகள்

மேலவையில் பாராட்டுரை

சென்னை, ஜூலை 19—

தமிழக முன்னாள் தொழிலமைச்சரும் சட்டமன்ற மேலவை எதிர்க் கட்சித் தலைவருமான திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், திட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு பதவி ஏற்கச் செல்லுவதால், அவருக்கு மேலவையில் அனைத்துக் கட்சியினரும் பாராட்டு வழங்கினர்.

திரு. வெங்கட்ராமன் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது முதலமைச்சர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"அரசியலை இனிய இயல்புகளுடன் எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பதை திரு. வெங்கட்ராமனிடமிருந்து மற்றவர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்."

இரா. நெடுஞ்செழியன்

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"திட்டக் குழுவில், தமிழகத்தின் நிலையறிந்த ஒருவர் இருக்க வேண்டுமென்பது, நமது நீண்ட நாள் கோரிக்கையாகும். எடுத்த எடுப்பிலேயே நமது கோரிக்கைகளை நிராகரிக்கும் தன்மையுடையவர்கள் இருந்த இடத்தில், தமிழகத்தின் நிலை தெரிந்த ஒருவர் இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்."

என். வி. நடராசன்

திரு. என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திரு. வெங்கட்ராமன் அவர்கள், தொழில் துறையிலே நல்ல சாதனைகள் பல புரிந்திருந்தாலும், அவை அனைத்தின் பயனும் ஒரு சில முதலாளிகளுக்குப் போய்விட்டது. அவற்றின் பயன் ஏழை – எளிய மக்களுக்குக் கிடைத்திருந்தால் இன்னும் நன்ருக இருந்திருக்கும்."

பத்திரத் தாளுக்குப் பஞ்சம் ஏன்?

மத்திய அரசின் பாராமுகம்--தமிழக அமைச்சர் வருத்தம்

மீண்டும் மீண்டும் வற்புறுத்தியும் பலனில்லை

சென்னை, ஜூலை 17—

"ஐந்து—பத்து — இருபத்தைந்து —ஐம்பது ரூபாய் பத்திர தாட்கள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைக் கருதி, ஜூலை முதல் நாளிலிருந்து, பணம் பெற்றுக்கொண்டு இரசீது கொடுக்கும் முறையில் பத்திரங்களைப் பதிவு செய்யலாம் என்று சப்-ரிஜிஸ்திரார்கட்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது"

என்று, வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் அறிவித்தார்.

"முத்திரைப் பத்திரத் தாள் அச்சிடும் நாசிக் அச்சகத்திலிருந்து போதிய பத்திரத் தாட்கள் கிடைக்கவில்லை என்றும் அச்சிடக்கூடிய தாட்கள் அயல் நாட்டிலிருந்து தற்போது கிடைக்காததே இதற்குக் காரணம் என்றும் மத்திய அரசினர் தெரிவித்துள்ளனர்"

என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேலும் துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரித்ததாவது:—

"உள்நாட்டில் உற்பத்தியாகும் தாளையே இதற்குப் பயன்படுத்த முடியுமா என்று ஆராயுமாறு கருத்தறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசுடன் இந்த அரசு இது தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது. நமது முதலமைச்சர் அவர்களும், துணைத் தலைமையமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

"பஞ்சாபில் உள்ள ஒரு காகித ஆலையில் உற்பத்தியாகும் காகிதம் இதற்குப் பயன்படும் என்று கருதப்படுகிறது.

"தமிழ் நாட்டில் பத்திரத் தாள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது குறித்துத் திரும்பத் திரும்ப மத்திய அரசுக்குத் தெரியப்படுத்திக் கொண்டே இருந்தும், ஏனே அவர்கள் இதில் கால தாமதம் செய்துவருகிருர்கள்.

"இடைக்கால ஏற்பாடாக, ரெவினியூ ஸ்டாம்பைப் பயன்படுத்தும் வகையில் ரூ. 13 கோடி மதிப்புக்கு ரெவினியூ ஸ்டாம்பு அனுப்பிவைக்குமாறும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிரோம்."

மின்னெளி பெறும் கிராமங்கள்!

சென்ற மே மாதத்தில்தமிழகத்தில் மின்சார வசதி பெற்ற நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 224; மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 3,435.

சென்ற மாதம் முதல் நாள்வரை தமிழகத்தில் மொத்தம் 25,492 ஊர்களும் 2,96,111 பம்பு செட்டுகளும் மின்சக்தி பெற்றுள்ளன.

தாய் மொழியில் தொழில் நுணுக்கக் கல்வி

மத்திய அரசு முடிவு

புதுடில்லி, சூலை 13—

"வேளாண்மை, பொறியியல், சட்டம், மருத்துவம், தொழில் நுட்பம் உட்பட பாடங்கள் அனைத்திற்கும் எல்லாக் கட்டங்களிலும் பாடமொழியாக இனி இந்திய மொழிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை கொள்கையளவில் மத்தியஅரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; இம்முடிவை நடைமுறைக்குக் கொண்டுவருவது பற்றிய விவரங்கள் ஆகஸ்டு 15-ல் அறிவிக்கப்படும்"

என்று கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென், நாடாளுமன்றத்தில் கூறினார்.

பாட மொழி குறித்து டாக்டர் சென் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்திய மொழிகள் பாட மொழியாக வேண்டுமென்ற போராட்டம், 100 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

"இந்திய மொழிகளைப் பாட மொழிகளாக்கினாலன்றி மக்களிடம் ஆக்க சக்தி வெளிப்படாது—கல்வித்தரம் உயராது—மக்களிடை அறிவு பரவாது படித்தவர்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையேயுள்ள இடைவெளி நீங்காது!"

ஒன்றுக்கும் உதவாத அரசுத் துறை

நாடாளுமன்றத்தில் கண்டனம்

புதுடில்லி, சூலை 19—

"விலை உயர்வைத் தடுக்கப் பயனுள்ள நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னால் ஊதியமுடக்கம் இராது"

என்று மத்திய தொழிலாளர் நலத் துறை துணையமைச்சர் எல். என். மிச்ரா, நாடாளுமன்றத்தில் கூறினார்.

"தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தைக்கூட அரசு உறுதிசெய்ய பொருளாதார நிலைமை அனுமதிக்கவில்லை. இத்தகைய தருணத்தில் ஊதிய முடக்கம் பற்றிய பேச்சுக்கள் கண்டிக்கத்தக்கதாகும்" என்று மிச்ரா கூறினார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட வங்காளத்தைச் சேர்ந்த காங்கிரசுக் கட்சி உறுப்பினர் டாக்டர் மைத்ரேயி போஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நாட்டின் குறைந்தபட்ச ஊதியத்தை வகுக்கவும், முழு அளவு வேலை வாய்ப்புத் திட்டத்தை வகுக்கவும் தொழிலாளர் நலத் துறை தவறிவிட்டதன் மூலம் தான் நீடித்திருப்பதற்கான உரிமையை அது இழந்துவிட்டது!"

பள்ளித் தேர்வு முறையில் மாற்றம்

தமிழக அரசு ஆய்வு

சென்னை, சூலை 18—

"உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்டு தோறும் தேர்வு நடத்துவதை அறவே ஒழித்துவிடும் நோக்கம் அரசுக்கு இல்லை ; ஆண்டு இறுதித் தேர்வில் பெறும் மதிப்பெண்களை மட்டுமே கொண்டு மாணவர் திறமையைச் சோதிப்பதற்குப் பதிலாக, மாதாந்தரத் தேர்வு — காலாண்டு, அரையாண்டுத் தேர்வு ஆகியவற்றில் பெறும் மதிப்பெண்களையும் கணக்கில் எடுத்துக் கொள்வதன் மூலம் தேர்ச்சி யளிக்கலாமா என்னும் யோசனை பரிசீலனையில் இருந்துவருகிறது ; மாதத் தேர்வு—வாரத் தேர்வுகளை நடத்தும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்தான் எஸ். எஸ்.எல்.சி. தேர்வில் முன்னிலையில் இருக்கிறார்கள்"

என்று சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சேலம் — தூத்துக்குடித் திட்டங்கள் நிச்சயம் நமக்குத்தேவை!

"சேலம் — தூத்துக்குடிப் பிரச்சினையில், 'கிளர்ச்சி மனப்பான்மை கூடாது' என்று கூறப்பட்டது ; 'அமைதியான கிளர்ச்சி' என்பது சனநாயக முறைகளில் ஒன்று!

"'கிளர்ச்சி என்பது, தவிர்க்கப்பட வேண்டியது' என்று கருதக்கூடாது. பலாத்காரம் நீக்கப்பட வேண்டியதுதான்—இரத்தப் புரட்சி தடுக்கப்பட வேண்டியதுதான் ; ஆனால், இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், இரத்தப் புரட்சி வந்த பிறகு தடுக்க முடிவதில்லை.

"'கிளர்ச்சி' என்பது, 'a constitutional form of expressing either a displeasure or a demand.'—அந்த விதத்தில், 'கிளர்ச்சி கூடாது' என்று யாரும் சொல்லத் தேவையில்லை!

"எழுச்சி நாளன்று எந்தவிதமான பலாத்கார நடவடிக்கையும் தலைகாட்டிவிடாதபடி நாங்கள் பார்த்துக்கொள்ளுகின்றோம். எங்களோடு இணைந்திருக்கின்ற ஒவ்வொருவரும் பொறுப்போடு இணைந்திருக்கிறார்கள் ; 'மத்திய அரசுக்கு உணர்த்த வேண்டும்' என்ற எண்ணத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள் ; ஆகவே, 'கிளர்ச்சி தேவையில்லை' என்று யாரும் சொல்லத் தேவையில்லை!

"உங்களை (காங்கிரசாரை) சூலை 23-ந் தேதியன்று கலந்துகொள்ளும்படி இதுவரை அழைத்துக் கொண்டிருந்தேன் ; இன்றையத்தினம் அப்படி நான் அழைக்கவில்லை. உங்களுடைய தலைவர் சுவையான ஒரு வேலையை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்று பத்திரிகையில் பார்த்தேன் ; 'சூலை 23-ந் தேதியன்று நன்றாகத் தூங்குங்கள்' என்ற வாசகத்தைச் சொன்னார்...

கே. விநாயகம் :—"He has been wrongly quoted."

அண்ணா :—"'அப்படி இல்லை' என்று நண்பர் விநாயகம் சொல்லுகிறார் ; 'அவ்வளவு பெரியவர் இந்தச் சின்ன விஷயத்தைச் சொல்லிக் கொடுப்பாரா? இது தன்னாலே வருகிற விஷயம் ஆயிற்றே?' என்றுகூட நான் ஆச்சரியப்பட்டேன். பத்திரிகைக்காரர்களுக்கு விநாயகத்திற்குத் தெரிந்திருக்கின்ற அளவுக்குத் தெரிவதில்லை—பத்திரிகைக்காரர்கள் உங்களிடத்தில் வந்து விளக்கம் கேட்டால் கொடுங்கள்.

"பத்திரிகையில், '........தூங்குங்கள்' என்று சொல்வதாகப் படித்தேன. எப்போதும் அவர் கொச்சையாகப் பேசுகிற முறையில், 'ஏதோ செய்கிறான் ; நமக்கென்ன—போய்த் தூங்கு போ' என்று சொன்னவுடன, 'சந்தோஷம் ; 23-ந் தேதியன்று நிம்மதியாகத் தூங்கலாம்' என்ற நிலையைப் பெற்றிருப்பார்கள்!

"ஒன்று மட்டும் கூறிக்கொள்வேன்—அன்று நீங்கள் நன்றாகத் தூங்குங்கள் ; உங்களுக்கும் சேர்த்து நாங்கள் அந்த வேலையைக் கவனிக்கிறோம். ஆனால், அப்படித் தூங்கும்போது, பயங்கரக் கனவு காணாதீர்கள்! நம்பிக்கையோடு தூங்குங்கள்! கனவு கண்டாலும் இன்பக் கனவாகக் காணுங்கள்! சேலம் திட்டம் வருவதைப் போலவும், தூத்துக்குடித் திட்டம் வந்ததைப் போலவும், கப்பல்கள் செல்லுவதைப் போலவும், சரக்குகள் இறங்குவதைப் போலவும் ஆன இன்பக் கனவுகள் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன்.

"இந்த இரண்டு திட்டங்கள் நிறைவேறுமானால் பல்லாயிரக்கணக்கான தொழிற் திட்டங்கள் வரும்! இப்போது இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக இருந்தாலும் உடனே 50,000 பேருக்கு வேலை கிடைத்துவிடாது—500 பேரிலேயே தீர்ந்துவிடும்; அல்லது, ஆயிரம் பேரிலேயேதீர்ந்துவிடும்!

"பெரிய எஃகுத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டால் அதனுடைய விளைவாகத் துணைத் தொழில்கள் ஆயிரக்கணக்கில் உண்டாகும்.

"தூத்துக்குடித் துறைமுகம் ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கப்பட்டால், தூத்துக்குடிக்குப் பக்கத்தில் உள்ள உப்பு வாணிபத்தின் மூலம் பல கோடி ரூபாய் இந்த நாட்டுக்கு ஆதாயம் கிடைக்கும். ஜப்பான் தனக்குத் தேவையான உப்புக்கு தூத்துக்குடி சிலாக்கியமானது என்று அறிந்து, என்னைப் பார்க்கும்போதெல்லாம், 'எவ்வளவு உப்பு தர முடியும்' என்று கேட்கிறார்கள்!

"தூத்துக்குடியில் உப்பு தயாரிப்பதற்கும் மற்ற இடங்களில் தயாரிப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது! மற்ற இடங்களில் கடல் தண்ணீரை இறைத்துப் பாத்தியாகக் கட்டி—சூரிய வெளிச்சத்தில் உலரவிட்டு உப்பை எடுக்கிறார்கள் ; அது சுத்தமாகக்கூட இருக்காது! ஆனால் தூத்துக்குடியில், 150—200 அடிக்குக் கீழே துளைபோட்டு, அதற்கு அடியிலிருந்து தண்ணீர் எடுத்து உப்பைத் தயாரிக்கிறார்கள்!

"'உலகத்திலேயே முதல்தரமான உப்பு' என்று சொல்லலாம்—தூத்துக்குடி உப்பை! அது இங்கே இருக்கின்ற நமக்கெல்லாம் தெரியவில்லை ; ஆனால், இராசஸ்தானில் உள்ள தரங்கதாரா என்ற முதலாளிக்குத் தெரிந்து, தூத்துக்குடிக்கு வந்து பெரிய தொழிற்சாலையை அமைத்து, சாதாரண உப்பு மட்டுமல்ல—இயந்திரத்திற்குத் தேவையான உப்புகளையும் தயாரித்து வருகிறார்!

"ஜப்பான் நாடு குசராத்திலிருந்து உப்பு வாங்குகிறது ; போன மாதம் அவர்கள், என்னைச் சந்தித்தபோது, 'பிலிப்பைன்' நாட்டில் இருந்துகூட உப்பு வாங்குவதாகச் சொன்னார்கள் ; தூத்துக்குடி உப்பை வாங்க அவர்கள் நிரம்ப விருப்பத்தோடு இருக்கிறார்கள் ; 'தூத்துக்குடித் துறைமுகத்திற்கான அந்நியச் செலாவணி கருவிகளைக் கொடுக்கிறோம் ; திருப்பி பணமாகக் கொடுக்க வேண்டாம் ; உப்பாகக் கொடுங்கள்—எடுத்துக் கொண்டு போகிறோம்' என்று சொல்லத்தக்க அளவுக்கு ஜப்பான் நாட்டுத் தொழில் நிபுணர்கள் தயாராக இருக்கிறார்கள். இது எப்படி நமக்குக் கிடைக்கும்? தூத்துக்குடி, ஆழ்கடல் துறைமுகமானால்தான் கிடைக்கும்!

"சேதுக் கால்வாய்த் திட்டம்—தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் இரண்டும் ஒருங்கிணைந்தால், அதைத் தமிழகத்தின் 'சூயஸ் கால்வாய்' என்று கருதலாம். இப்போது சிலோனைச் சுற்றி கொழும்புத் துறைமுகத்துக்குப் போய் கிட்டத்தட்ட 600 மைல்கள் சுற்றிக்கொண்டுவருகின்ற வெளிநாட்டுக் கப்பல்கள், இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன்மூலம் அந்நிலைமையைத் தவிர்த்துவிட இயலும்.

வெளிநாட்டுக் கப்பல்கள்—பிரும்மாண்டமான கப்பல்கள்—இப்போது அந்தத் துறைமுகத்தில் நிற்க முடியாது. ஆழ்கடல் துறைமுகமாக இருக்குமானால் பெரிய கப்பல்கள் வர—பல நாட்டுக் கப்பல்கள் வரத்தக்க பெரிய அனைத்து நாட்டுத் துறைமுகமாக மாறும். அப்படி மாறும்போது பல்வேறு வகையான தொழில்கள் கிடைக்கும். அப்படிக் கிடைக்குமானால் பொருளாதார வளர்ச்சி நிரம்ப ஏற்படும்.

"ஆகையால் சேலம், தூத்துக்குடித் திட்டங்கள் என்பது, ஏதோ 'கோஷத்'திற்காகச் சொல்லப்படுவதல்ல ; 'கோஷம்' சொல்வதில்தான் எங்களுக்கு அதிகமான பிரியம் என்றால், 'மாநிலத்திற்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடு' எனறு கோஷம் போட முடியாதா? முழக்கம் போட முடியாதா? ஊர்வலம் நடத்தமுடியாதா? மாநாடு கூட்ட முடியாதா? ஆகவே, இது முழக்கத்துக்காக எடுத்துக் கொண்டதல்ல!

"நம் நாட்டில் தொழில் வளர்ச்சி மிகமிகத் தேவை என்பதால் சேலத்தையும், தூத்துக்குடியையும் நிச்சயமாக நாம் பெற்றாக வேண்டும். அதைப் பெறுவதற்கேற்ற வகையில் பணியாற்ற வேண்டும்.

"திரு. காசிராசன் அவர்கள்தான் சொன்னார்கள்—'ரொம்ப எளிதாக அவர்கள் சொல்லி முடித்துவிட்டார்கள் அந்தப் பிரச்சினையை ; நாமே பார்த்துக் கொண்டால், அவர்கள் அதில் குறுக்கிட மாட்டார்கள்' என்று! அவர் நல்லவர்—நல்லபடி நம்புகிறார்! உள்ளபடியே அப்படி நம்புவதற்கில்லை! 'நாங்களே ஆரம்பிக்கிறோம் ; எங்களுக்கு அனுமதி கொடுங்கள்' என்று முன்னாள் தொழிலமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஐம்பது ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி—சேஷசாயி மனு செய்வதைப்போல் - டி. வி. எஸ். மனு செய்வதைப்போல் - காசிராமன் அவர்கள் மனு போடுவதைப்போல்—மனுப்போட்டு ஆண்டு ஒன்றாகியும் பதில் வரவில்லை! நான் வந்து, மூன்று தடவை கேட்டாகிவிட்டது ; இன்னும் பதில் வரவில்லை! ஆகவே, 'உடனே நடந்துவிடும்' என்று கருதாதீர்கள்!

"திருப்பதி வெங்கடேசப் பெருமாள்கூட, சாதாரணமாகக் கும்பிட்டால் அதிகம் கொடுக்கமாட்டார் ; தரையில் புரண்டு கும்பிட்டால்தான் தீராத வினைகளையெல்லாம் தீர்ப்பார்!

"நீங்கள் உங்களால் ஆனதைச் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை—நான் குறைபடவில்லை. திரு. வெங்கட்ராமன் அவர்கள், இதற்காகப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள் ; எனக்கு அதில் அவரிடம் மிகுந்த மதிப்புண்டு; அவருடைய முயற்சி வெற்றிபெறாததால்தான் மக்களை திரட்டி, இது, மக்கள் கோரிக்கை ; இது, நாட்டின் கோரிக்கை ; இது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை மட்டுமல்ல—இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் கோரிக்கை மட்டுமல்ல—சுதந்திரக் கட்சியின் கோரிக்கை மட்டுமல்ல—எல்லாக் கட்சிகளின் கூட்டுக் கோரிக்கை என்பதை டெல்லி அரசுக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்த 23-ந்தேதி!

"மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள், இந்த எழுச்சி நாள் எல்லாம் தேவை இல்லை' என்ற கருத்தைக் கொண்டவர் ; 'நல்ல அரசியல் ரீதியில் இந்தக் காரியத்தைச் செய்துகொண்டு போகலாம்'என்ற கருத்தைக் கொண்டவர் ; என்றாலும், இதில் ஈடுபட்டிருப்பதால்—என்னிடம் அவருக்குள்ள அன்பு காரணமாக—நம்பிக்கை காரணமாக—நான் எப்போதும் வழிதவறிப்போகமாட்டேன் என்பதில் அவருக்கு அழுத்தமான நம்பிக்கை இருப்பதால்—'சுதந்தராக் கட்சியும் இதில் கலந்து கொள்ளலாம்' என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, இதிலே கலந்துகொள்ளாதவர்கள் யாரும் இல்லை! காங்கிரசுக்காரர்களுக்குக்கூட இதில் எதிர்ப்பு இல்லை! அவர்கள் தூங்கப்போகிறார்கள் அவர்கள் எதிர்க்கப்போவதில்லை....

திரு. பி. ஜி. கருத்திருமன் :—"ஆசீர்வாதம் செய்கிறோம்."

அண்ணா :—"ஆசீர்வாதம் செய்கிறார்கள் — தூக்கத்தில் ரிஷிகள்கூட—தபோதனர்கள்கூட விழித்

(4-ம் பக்கம் பார்க்க)

மதுக் கடைக்காரர்களுடன் 'கள்ள மது' போட்டி!

கேரளத்தில் விசித்திர நிலை !

திருவனந்தபுரம், சூலை 19—

கேரளத்தில் மதுவிலக்கு ரத்தாகி புதிய மதுக் கடைகள் இயங்கத் துவங்கியும், திருட்டுத்தனமாக மது உற்பத்தி செய்து விற்கப்படுவதுதொடர்ந்துநடைபெறுவதாகத் தெரிகிறது.

இங்கு கூடிய மதுக்கடைச் சொந்தக்காரர்களின் கூட்டத்தில், இதைக் கண்டித்துப் பலரும் பேசியிருக்கின்றனர்.

திருட்டு மது விற்பனையைத் தடுக்க அரசு தவறும்பட்சத்தில், கள்ளுக்கடைகளை அரசே ஏற்று நடத்தவேண்டுமென்றும், அல்லது கடைகளை மூடிவிட்டுத் தங்களுக்குச் சேரவேண்டிய பணத்தை அரசிடமிருந்து ஈடாகப் பெறத் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்குமென்றும் அவர்கள், அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், அனுமதி பெற்று விற்கப்படும் மதுவைவிட விலை குறைவாக—கள்ளத்தனமாக விற்கப்படும் மது இருப்பதாகவும், இதனால் மது அருந்துவோர் கள்ளத்தனமான மதுவையே வாங்கிக் குடிப்பதாகவும், இதனால் அனுமதிபெற்ற மதுக்கடைகள் பல மூடவேண்டிய நிலைக்கு வந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

டில்லி அரசின் போக்கு

காங்கிரசு அமைச்சரே கண்டிக்கிறார் !

"வெளிநாட்டுச் சேலவாவணி கிடைக்கும் என்ற ஆசையில் நமக்கு இன்றியமையாதனவாக உள்ள போருகளைக்கூட நாம் ஏற்றுமதி செய்துவிடுகிறோம். எடுத்துக்காட்டாக, நம்முடைய கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் கிடைப்பது அரிதாக உள்ள நேரத்தில், ரூ. 50 கோடி பெறுமானமுள்ள பிண்ணாக்கை மத்திய அரசு ஏற்றுமதி செய்து வருகிறது"

என்று கருநாடக மாநில காங்கிரசு அமைச்சர் தேவராஜ அர்சு, ஒரு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

போலீசு அறிக்கைகள் பற்றி முதலமைச்சர் அண்ணா

சென்னை, சூலை 19—

"போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அறிக்கை பற்றி இங்கே—(மேலவையில்) அதிருப்தி ஏற்பட்டுள்ளது ; போலீசு கமிஷனர் அறிக்கை பற்றி அங்கே (சட்டமன்றத்தில்) அதிருப்தி நிலவுகிறது.

"அவர்கள் விடுத்தது அறிக்கையல்ல ; பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள்தான்!

"பத்திரிகைக்காரர்கள் கேள்வி கேட்கும்போது போலீசு அதிகாரிகளால் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதுபற்றி மேலும் விவாதிப்பது நிருபர்களுக்கு விருந்தாக முடியும். ஆகவே, அதிகம் விவாதிக்க விரும்பவில்லை."

—(சட்டமன்ற மேலவையில்)

திருவள்ளுவர் விழா ஒலிபரப்பு

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் 17—7—67 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விழா நிகழ்ச்சிகள் பெங்களூர் வானொலி நிலையத்திலிருந்து (மீட்டர் 491.8) 23—7—67 இரவு 8-10 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

எழுச்சி நாள்--தமிழகமெங்கும் பொதுக்கூட்டங்கள்

காங்கிரசு தவிர்த்து ஏனைய கட்சிகளெல்லாம் பங்கேற்கின்றன

சேலம்—தூத்துக்குடித் திட்டங்களை வற்புறுத்தும்வகையில், சூலை 23-ல் எழுச்சி நாள் கொண்டாட வேண்டுமென்று பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்த அறிக்கைக்கிணங்க, தமிழகம் முழுவதிலும் எழுச்சி நாள் பொதுக்கூட்டங்கள், கழகச் சார்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

அண்ணா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சுதந்தரா—முஸ்லிம் லீக்—இடதுசாரி கம்யூனிஸ்டு—வலதுசாரி கம்யூனிஸ்டு—பிரஜா சோஷலிஸ்டு—சம்யுக்த சோஷலிஸ்டு—தமிழரசுக் கழகம் ஆகிய கட்சியினரும் எழுச்சி நாள் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

ஆங்காங்கு நடைபெறவிருக்கும் பொதுகூட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

பெத்துநாயக்கன்பாளையம்

மாலை 6 மணிக்கு கோட்டகரை மாரியம்மன்கோயில் திடலில்; தலைவர் : பி. எஸ். காசி விசுவநாதன் எம்.ஏ., பி.டி., பேசுவோர் : கே. என். இராமச்சந்திரன் எம்.ஏ., எம்.எல்.ஏ., கே. என். சிவப்பெருமாள் பி.எஸ்சி.,பி.எல்., எம்.எல்.ஏ., டி. சண்முகம், எஸ். சி. மாணிக்கம், ஆர். பூவராகசாமி, வி. வேலுசாமி, என். மாணிக்கம், கே. சி. கிருட்டினசாமி, தனராசு, மற்றும் பலர்.

நாச்சியார்கோயில்

மாலை 6 மணிக்கு வடக்கு வீதியில் ; தலைவர் : திரு. இராமலிங்கம் ; பேசுவோர் : எஸ். இராதா, கே. ஏ. நாகராசன், அ. சர்புதீன், மு. இசுமத்பாட்சா, பொ. கோவிந்தராசன், இரா. கேசவன், வி. கே. இராமசாமி, பி. கே. வேலாயுதம், எஸ். எம். அலாவுதீன், மற்றும் பலர்.

கோத்தகிரி

பகல் 1 மணிக்கு, மணியக்காரர் சாவடி அருகில் ; தலைவர் : கே. என். அஜ்ஜன் ; பேசுவோர் : கண்ணமாறன், சோ.இராமண்ணா, இ. நஞ்சன் பி.ஏ., கா. அன்பன், ஜே. எச். இராமன், மற்றும் பலர்.

திருப்பூர்

இரவு 7 மணிக்கு, நகர மண்டபத்தில் ; தலைவர் : சு. துரைசாமி எம்.எல்.ஏ., பேசுவோர் : எஸ். இராகவானந்தம் எம்.சி., வே. சுப்பிரமணியம், ஏ. கணபதி, ஐ. எம். சரீப், மொய்தீன், கே. கே. இராமசாமி பி.ஏ.,பி.எல்., வி. அங்கப்பன் பி.ஏ.,பி.எல்., செ. மா. கந்தநாதன், சென்னியப்பன் மற்றும் பலர்.

கடலூர்

மாலை 6 மணிக்கு மஞ்சை நகர் மைதானத்தில்; தலைவர் : கி. கோவிந்தராசன் ; பேசுவோர் : ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வி.கிருட்டினமூர்த்திஎம்.ஏ.,பி.எல்., எம்.பி., டாக்டர் வி. கிருட்டினமூர்த்தி, அப்துல்காதர் சையத், பி. வி. பண்டரிநாதன், எஸ். நடராசன், ஏ. வி. தண்டபாணி, பி. கண்ணன், வி. எஸ். காந்தி, அர. மணவாளன், மற்றும் பலர்.

ஓமலூர்

மாலை 6 மணிக்கு ; பேசுவோர் : அ. பொ. அரசு எம்.எல்.ஏ., சி. பழனி எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

தாரமங்கலம்

மாலை 6 மணிக்கு ; பேசுபவர் : கே. ஆர். கோவிந்தன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

வனவாசி

மாலை 6 மணிக்கு ; பேசுவோர் : குன்னத்தூர் க. அன்பரசு, எம். சுரேந்திரன் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

செஞ்சி

மாலை 6 மணிக்கு, செல்வ விநாயகர் கோயில் அருகில் ; தலைவர் : கு. கோபால்; பேசுவோர்: அமுதா ராகவன், எம். ஏ. பாரி, வி. முனுசாமி, பி.காம்.,பி.எல்., ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்., கே. பாண்டுரங்கன் பி.ஏ.பி.எல்., கே. எம். அபுபக்கர், மற்றும் பலர்.

மேட்டூர் அணை

மாலை 6 மணிக்கு; சேவா சங்க மைதானத்தில் ; பேசுவோர் : செ. கந்தப்பன் எம்.ஏ., எம்.பி., அபாலு, மற்றும் பலர்.

ஆலந்தூர்

இரவு 7 மணிக்கு தருமராசா கோயில் திடலில் ; தலைவர்: வாசு; பேசுவோர் : சி. எல். ஆனந்தன், சைதை சம்பந்தம் எம்.சி., சி. பி. பவளவண்ணன் எம்.சி., எஸ். பாலன், இர. கோதண்டராமன், மொய்தீன், பி. டி. இராகவன், நரசிம்மன்.

ஈரோடு

இரவு 7-மணிக்கு காரை வாய்க்கால் திடலில் ; தலைவர் : நா. நடேசன் ; பேசுவோர் : காஞ்சி கல்யாணசுந்தரம், ரெ. ஆறுமுகம், எஸ். பி. வெங்கடாசலம், எம். எஸ். பழனியப்பன், த. விசுவநாதன், கே. யு. கிருட்டினன், மா. ஆறுமுகம், ப. ச. விசுவநாதன்.

திருப்புத்தூர் (முகவை)

மாலை 6-மணிக்கு காந்தி சிலை அருகில் ; தலைவர் : கா. காத்தமுத்து ; பேசுவோர் : பெரி. அழகு, கே. பி. ஜானகி எம்.எல்.ஏ., எஸ். நாராயணன், ஆர். சீனிவாசன் பி.ஏ.,பி.எல்., வி. நூர்முகமது, வயி. வீரபத்திரன்.

வெள்ளலூர்

இரவு 7-மணிக்கு; பேசுவோர் : செ. மாதா கவுடர், கேரளசுந்தரம், க. மருதாசலம், இராசு, மற்றும் பலர்.

கருவலூர்

மாலை 6-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர் : க. அ. சக்திவேல்; பேசுவோர் : கேரளசுந்தரம், க. செ. அவனாசியப்பன், மற்றும் பலர்.

சிவகாசி

இரவு 7-மணிக்கு நகராட்சிப் பூங்காத் திடலில்; தலைவர் : எஸ். பழனிச்சாமி ; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எஸ். அழகு எம்.எல்.ஏ., ஏ.துரைக்கண்ணன், தொண்டர் துரைசாமி, ஏ. ஆர். சுந்தரராசன் பி.ஏ., எம். முனியாண்டி, வே. கருணாகரன், ஆர். எஸ். குருசாமி, கியாசுதீன், மற்றும் பலர்.

திருத்தங்கல்

இரவு 7-மணிக்கு என். எஸ். கே. திடலில் ; தலைவர் : ஆர். மீனாட்சி சுந்தரம் ; பேசுவோர் : அப்தாலீப் ; இரா. துரையரசு, ஏ. எஸ். கனி, லூர்துசாமி, இரா. பொன் பாண்டியன், டேவிட் ரத்தினம், நா. ப. அண்ணாமலை, கே. ஏ. குருசாமி, ப. சுப்பிரமணியம்.

சாத்தான்குளம்

இரவு 7-மணிக்கு தலைவர் : எஸ். பி. சுடலைமுத்து ; பேசுவோர் : எஸ். டி. ஆதித்தன் பி.ஏ.பி.எல்., ஐ. உத்திரபாண்டியன் பி.ஏ. பி.எல்., எஸ். செல்லையா, வீ. கார்த்தீசன், சிதம்பரநாதமார்த்தாண்டன், சங்கரன், அ. பு. இளங்கோ, இரா. நல்விளைவேல்.

கரூர்

இரவு 7-மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர் : என். ஆர். இராமசாமி ; பேசுவோர் : பெ. சௌந்தரபாண்டியன் எம். ஏ. பி. எல்., எம். எல். ஏ., எஸ். கந்தசாமி எம்.எல்.ஏ., சி. சோளியப்பன், கே. எஸ். சோமு, வி. கே. இராமசாமி, பரமத்தி சண்முகம், சி. ஏ. நரசிம்மன், ஜி. உடையவர், கே. பி. இராமசாமி, மற்றும் பலர்.

பொன்னேரி

மாலை 6-மணிக்கு பேசுவோர் : இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., ப. நாகலிங்கம் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

திருவாரூர்

மாலை 6-மணிக்கு கீழ வீதியில் ; தலைவர் : பி. எஸ். தனுஷ்கோடி எம்.எல்.ஏ., பேசுவோர் : தில்லை வில்லாளன் எம்.ஏ.பி.எல்., கா. வேழவேந்தன் பி. ஏ. பி. எல்., எம்.எல்.ஏ., வி. ஆர். செல்லப்பன், எஸ். சேக் தாவுது, டி. நடராசன், இராமசாமி, கே. பி. மாணிக்கம், எஸ். எம். நூர்தீன், சின்னத்தம்பி, மற்றும் பலர்.

மீஞ்சூர்

மாலை 6-மணிக்கு தலைவர் : மு. கேசவன் ; பேசுவோர் : பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., சி. கே. மாணிக்கம், கே. பாலகிருட்டினன், என். வி. தங்கசாமி, சி. எம். சாமி, கே. ஆசைத்தம்பி, பி. துரைசாமி, எம். அப்துல்லா, சிவலிங்கம், செஞ்சு இராமலிங்கம், கெ. பஞ்சாட்சரம், பச்சையப்பன்.

சோழவந்தான்

மாலை 6-மணிக்கு ; தலைவர் : எம். மாணிக்கம் ; பேசுவோர் : ஆ. திராவிடமணி, பி. எஸ். மணியம் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., கூ. குருசாமி, மா. வேலன், எஸ். எஸ். சுப்பிரமணியம், டி. ஏ. விசுவநாதன், சுந்தரராசன், சுப்பையா, குப்புசாமி, நா. சீராமலு, மு. துரைச்சாமி.

பல்லடம்

மாலை 6-மணிக்கு ஜீவா திடலில்; தலைவர் : எஸ். ஏ. பி. சுந்தரம் ; பேசுவோர் : க. நாச்சிமுத்து, ஏ. ஆர். ரங்கசாமி, ரகுமான், ஆர். எஸ். மணி, ப. சண்முகம், மு. சுப்பிரமணியம், டாக்டர் இராமநாதன், முத்துக்குமாரசாமி, கே. என். குமாரசாமி எம்.எல்.ஏ., என். ஏ. பி. நாச்சிமுத்து, பி. ஆர். பழனிச்சாமி, கே. இராமசாமி.

பெரியகுளம்

மாலை 6-மணிக்கு ; பேசுபவர் : கே. எம். எம். மேத்தா எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

திருவில்லிபுத்தூர்

வடக்கு ரத வீதியில் ; மாலை 6-30 மணிக்கு ; தலைவர் : ஆண்டி என்ற குருசாமி எம்.எல்.ஏ.; பேசுபவர் : நெல்லை மணிமொழியன், மற்றும் பலர்.

காஞ்சிபுரம்

மாலை 6-மணிக்கு இரட்டை மண்டபம் அருகில்; தலைவர் : வி. என். மார்க் ; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.சி., கே. இராசகோபாலன், கே. எஸ். பார்த்தசாரதி, ஓ. ந. துரைபாபு, வி. சுப்பிரமணியன், மா. நடேசன், அப்துல்ரகுமான், கே. டி. எஸ். மணி எம்.சி., எஸ். முருகேசன்.

கீழ ஈரல்

மாலை 6-மணிக்கு; பேசுபவர் : சி. நல்லரசு எம்.ஏ.,பி.டி., மற்றும் பலர்.

வல்லம் (தஞ்சை)

இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : என். இ. உசேன் ; பேசுவோர் : வெ. கண்ணன், துரை. கோவிந்தராசன், மற்றும் பலர்.

திண்டுக்கல்

இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : மு. காதர்சா பி.ஏ.; பேசுவோர் : சி. சிட்டிபாபு எம்.பி., நீ. அன்புச்செழியன் பி.ஏ., எம்.பி., என். வரதராசன் எம்.எல்.ஏ., வி. மதனகோபால், நா. முத்துலக்கையன், கே. வி. சவுரிமுத்து, பி. மா. அப்துல் ரசீது.

மணப்பாறை

இரவு 7-மணிக்கு காய்கனி சந்தைத் திடலில்; தலைவர் : ஏ. எஸ். கணபதி ; பேசுவோர் : எம். எஸ். வெங்கடாசலம் எம்.ஏ., பி.எல்., காசிநாதன், ஆர். வி. பொன்னுசாமி, முகமது யூசுப், ஜி. நாராயணன், மற்றும் பலர்.

அந்தியூர்

இரவு 7-மணிக்கு தேரடித் திடலில் ; தலைவர் : கே. கே. மாரசாமி; பேசுவோர் : மு. மைதீன் பாட்சா பி.ஏ.பி.எல்., ஈ. எம். நடராசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., பி. ஜி. எல்லப்பா, அ. வெற்றிவேல், ஏ. ஆர். கோவிந்தசாமி, ஏ. கே. ஆறுமுகம், மற்றும் பலர்.

சேந்தமங்கலம்

இரவு 7-மணிக்கு பெருமாள் கோயில் மைதானத்தில் ; தலைவர்: ஆ. நடராசன் ; பேசுவோர் : ப. க. தமிழழகன், மு. பழனிவேலன், மற்றும் பலர்.

நிலக்கோட்டை

இரவு 7-மணிக்கு வ. உ. சி. திடலில் ; தலைவர் : என். பி. முத்திருளாண்டி எம்.எல.ஏ., பொன். முத்துராமலிங்கம் பி.ஏ.பி.எல்., கூ. குருசாமி, பழ. வீரப்பன், இ. காத்தான், இராசு.

சத்திரக்குடி

மாலை 6-30 மணிக்கு மரைக்காயர் இல்லத்தின் முன்பு; தலைவர் : ம. பி. கா. ஜின்னா ; பேசுவோர் : டி. ஆர். இராசன் பி.ஏ. பி.எல்., அ. வே. அரவரசன், தினகரன், கு. இரத்தினசாமி, மற்றும் பலர்.

கவுந்தப்பாடி

இரவு 7-மணிக்கு புரட்சிக் கம்பர் திடலில் ; தலைவர் : என். ஆர். வீரப்பா ; பேசுவோர் : இரா. துரை, ஏ. எம். இராசா எம்.ஏ., எம்.எல்.ஏ., பி. ஏ. சாமிநாதன் எம். பி., சுப்பிரமணியம் பி. ஏ. பி.எல்., பழனிச்சாமி பி.ஏ.பி.எல்., கே. எம். சென்ருயன், ஏ. பாலசுப்பிரமணியம்.

செங்கற்பட்டு

மாலை 6 மணிக்கு பிள்ளையார் குளம் திடலில்; தலைவர் : வா. பசுபதி எம்.சி ; பேசுவோர் : எம். குமார், பவளவண்ணன் எம்.சி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., செ. எ. பலராமன், ஏ. ஆர். அன்சர் எம்.சி., சி. எம். தட்சணாமூர்த்தி, கோ. ஆலாலசுந்தரம், எஸ். நடராசன், ஓ. கே. முத்துசாமி, மற்றும் பலர்.

அரக்கோணம்

மாலை 6 மணிக்கு மோசூர் ரோடு மைதானத்தில்; தலைவர் : ஏ. எல். சி. கிருட்டினசாமி ; பேசுவோர் : ஓ. பி. இராமன் எம்.ஏ. பி.எல்., எம்.எல்.ஏ., எஸ். ஜே. இராமசாமி எம்.எல்.ஏ., ஜி. எல்லப்பன், எஸ். குப்புசாமி, உமர்கான், காதர் மொய்தீன், என்.எஸ். பூங்காவனம், தட்சணாமூர்த்தி, மற்றும் பலர்.

கீழ்வேளூர்

மாலை 6 மணிக்கு கீழ வீதியில் ; தலைவர் : மு. அ. மு. சுல்தான் ; பேசுவோர் : கோ. சி. மணி, கே. ஆர். ஞானசம்பந்தம் எம்.எல்.ஏ., கே. கேசவராசு, கு. கணபதி, ச. கலையழகன், இர. கணேசன், பி. இலட்சுமணன், எம். கே. கணபதி, என்.எம். காத்தமுத்து, எம். பி. முகமது.

ஆலந்துறை

மாலை 6 மணிக்கு மாகாளியம்மன் திடலில்; தலைவர் : ஏ. பழனிச்சாமி ; பேசுவோர்: எஸ். ஏ. இராசமாணிக்கம், மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ., கோவை இரா. மோகன், மற்றும் பலர்.

தாமல்

மாலை 6 மணிக்கு; தலைவர் : ஏ. எம். திருவேங்கடம் ; பேசுவோர் : வெ. சம்பந்தம், பி. முருகேசன், த. மு. கண்ணன், டி. நாகப்பன், கே. பரமசிவம், என். ஏ. ஆனந்தன், வ. அருணசலம், எஸ். முருகன், மற்றும் பலர்.

பெங்களூர்-சுதந்தர நகரில் பொதுக்கூட்டம்

"பெங்களூர்—சுதந்திர நகரில் 23—7—67 அன்று மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில், சிற்றுளி சுப்பிரமணியம் கலந்து கொண்டு பேசுகிருர். கழகத் தோழர்கள் திரளாக வருகை தந்து கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்"

என, கருநாடக மாநில அமைப்பாளர் தி. திராவிடமணி தெரிவித்துக் கொள்கிருர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

22--7--67

அடைக்கம்பட்டி

தி.மு.க. சார்பில் இரவு 7-30 மணிக்கு; தலைவர்: வை. இளமாறன்; பேசுவோர்: அறிவுடைநம்பி, இரா. நாராயணன் எம்.எல்.ஏ., இரா. இளமுருகு.

சமயநல்லூர்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு திருவள்ளுவர் திடலில்; தலைவர்: வி.எம். துரைராசு; பேசுவோர்; எஸ். முத்து எம்.எல்.சி., ஆ. திராவிடமணி, க.காளிமுத்து பி.ஏ., கே. இராசு, கோவிந்தன், மற்றும் பலர்.

திருவொற்றியூர்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் விம்கோ நகரில்; தலைவர்: த. லோகநாதன்; பேசுவோர்: அ.பொ. அரசு எம்.எல். ஏ., வை. பார்த்தசாரதி, எஸ். கண்ணப்பா. (அ. ஆதி தலைமையில் சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

கலை நிகழ்ச்சி

திருத்தங்கல் தி மு க. சார்பில் 23—7—67 இரவு 7 மணிக்கு என்.எஸ்.கே. திடலில் குமாரி விசயாவின் 'ஆளுகின்ருர் அண்ணா' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

துரை. நாரணன் நிகழ்ச்சிகள்

சூலை 22: நத்தம்பட்டி ; 23: அம்பாசமுத்திரம், பெரியகொல்லப்பட்டி ; 24: திருவில்லிபுத்தூர் ; 25: சிவகிரி (நெல்லை); 28 முதல் ஆக. 1 வரை புளியங்குடி, சிந்தாமணி.

முகவரி: துரை. நாரணன், 56 சன்னதி தெரு, திருவில்லிபுத்தூர்.

சேலம், தூத்துக்குடித் திட்டங்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டுதான் ஆசீர்வாதம் செய்வார்களே தவிர, தூங்கிக்கொண்டு ஆசீர்வாதம் செய்ய மாட்டார்கள் ! ஆனல் காங்கிரசாரோ, தனி மாதிரியான தபோதனர்கள்—ரிஷிகள் ! எப்படியாவது ஆசீர்வாதம் செய்யட்டும் ! அவர்களும் இதில் விருப்பம் உள்ளவர்கள்தான் ! 'நம் மாநிலத்திற்கு மிக முக்கியமாக சேலம், தூத்துக்குடி கட்டாயம் தேவை' என்பதில் திடமான நம்பிக்கை உள்ளவர்கள் ! அவை கிடைப்பதற்கு நீங்கள் எங்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் எடுத்துக்கொண்டிருக்கிற பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றுவதாக உங்களுக்கு உறுதி அளிக்கிறேன்.''

---முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில் நிதி ஒதுக்கல் மசோதா மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]